# நோயாளி தகவல் கையேடு

## [LINAGLIPTIN/METFORMIN]

### இந்த மருந்து எதற்கானது?

Linagliptin, Metformin என்றழைக்கப்படும் இரு வெவ்வேறு மருந்துகள் இதில் உள்ளடங்குகின்றன. Metformin மருந்து உங்கள் உடல் இன்சுலினை மேலும் நன்றாகப் பயன்படுத்த உதவி புரிவதன்வழி நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துகிறது. அதோடு, உங்கள் கல்லீரல் உற்பத்தி செய்யும் சர்க்கரையின் அளவையும் குறைத்து, இரத்தத்தில் சர்க்கரை அளவைக் குறைக்கிறது. Linagliptin சாப்பாட்டுக்குப் பிறகு சுரக்கும் இன்சுலினை அதிகரிக்கவும், கல்லீரல் உற்பத்தி செய்யும் சர்க்கரையின் அளவைக் குறைக்கவும் உதவி செய்து, நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துகிறது. இவ்விரு மருந்துகளும் ஆரோக்கியமான உணவு, வழக்கமான உடற்பயிற்சி போன்ற வாழ்க்கைமுறை மாற்றங்களுடன் சேர்ந்து, இரத்தச் சர்க்கரை அளவைக் குறைப்பதற்குத் துணை புரிகின்றன.

### இந்த மருந்தை நான் எப்படி உட்கொள்ளவேண்டும் / பயன்படுத்தவேண்டும்?

இந்த மருந்தை நீங்கள் சாப்பாட்டுடன் அல்லது சாப்பாட்டுக்குப் பிறகு உட்கொள்ளலாம். இதன்வழி, வயிற்றில் அசௌகரியம், குமட்டல் அல்லது வயிற்றுப்போக்கு ஏற்படக்கூடிய சாத்தியம் குறையும்.

### இந்த மருந்தை நான் உட்கொள்ள / பயன்படுத்த மறந்துவிட்டால் என்ன செய்வது?

நீங்கள் ஒரு வேளைக்கான மருந்தை உட்கொள்ள மறந்துவிட்டால், நினைவுக்கு வந்தவுடன் தவறவிட்ட மருந்தை உட்கொள்ளுங்கள். மறக்காமல் உணவுடன் மருந்தை உட்கொள்ளுங்கள். அடுத்த வேளைக்கான மருந்து உட்கொள்ளவேண்டிய நேரம் நெருங்கிவிட்டால், வழக்கமான அளவு மருந்தை மட்டும் உட்கொள்ளுங்கள்.

தவறவிட்ட மருந்துக்காக இருமடங்கு அல்லது கூடுதல் மருந்து உட்கொள்ளவேண்டாம்.

### நான் என்னென்ன முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்?

பின்வருவன உங்களுக்குப் பொருந்தினால், உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரிடம் தெரியப்படுத்துங்கள்:

- இந்த மருந்துக்கு அல்லது இந்த மருந்திலுள்ள மற்ற உட்பொருட்களுக்கு ஒவ்வாமை இருக்கிறது
- நீங்கள் கர்ப்பமாக இருக்கிறீர்கள், கருவுறத் திட்டமிடுகிறீர்கள், அல்லது தாய்ப்பால் ஊட்டுகிறீர்கள்
- கணைய அழற்சி (கணைய வீக்கம்) போன்ற கணையப் பிரச்சினைகள் உள்ளன
- பித்தப்பை கற்கள், அடிக்கடி மதுபானம் குடிக்கும் பழக்கம் அல்லது இரத்தத்தில் மிக அதிகளவு கொழுப்பு அமிலங்கள் (ட்ரைகிளிசரைட்ஸ்) உள்ளன. இந்த மருத்துவப் பிரச்சினைகள், கணைய அழற்சி ஏற்படக்கூடிய சாத்தியத்தை அதிகரிக்கும்.
- உங்களுக்கு இதயத்தில், சிறுநீரில் அல்லது கல்லீரலில் பிரச்சினைகள் உள்ளன

- நீங்கள் ஸ்கேன் அல்லது எக்ஸ்-ரே பரிசோதனைக்குச் செல்கிறீர்களா? அப்படியானால், ஓரிரு நாட்களுக்கு metformin உட்கொள்வதை நிறுத்த வேண்டியிருக்கலாம்.
- நீங்கள் அறுவை சிகிச்சைக்குச் செல்கிறீர்கள்
- இதற்குமுன் நீரிழிவு கீட்டோஅசிடோசிஸ் பாதித்திருக்கிறது. உங்கள் இரத்தத்தில் அல்லது சிறுநீரில் கீட்டோன்களின் அளவு அதிகரித்ததால், இரத்தத்தில் அமிலத்தன்மை கூடும் நீரிழிவுப் பிரச்சினை இது.

நீங்கள் சாப்பிடாமல் இருந்து இரத்தப் பரிசோதனை செய்யவேண்டுமானால், இரத்தம் எடுக்கப்பட்டு, நீங்கள் சாப்பிட்டு முடிக்கும்வரை மருந்தை உட்கொள்ளவேண்டாம்.

## இந்த மருந்தின் பொதுவான பக்கவிளைவுகள் என்ன?

எல்லா மருந்துகளையும் போலவே, இந்த மருந்தும் சில உத்தேசப் பக்கவிளைவுகளை ஏற்படுத்தலாம். ஆனால், எல்லோருக்கும் பக்கவிளைவுகள் ஏற்படுவதில்லை. பக்கவிளைவுகளில் ஏதாவது கடுமையாகி தொல்லை கொடுத்தால், உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரிடம் ஆலோசனை நாடுங்கள்.

Linagliptin/Metformin மருந்தின் பொதுவான பக்கவிளைவுகளில் உள்ளடங்குவன:

- தலைவலி
    - தலைவலியைப் போக்க, தேவைப்பட்டால் Paracetamol (பாராசிட்டமால்) மாத்திரை உட்கொள்ளுங்கள்
- மூக்கடைப்பு அல்லது மூக்கு ஒழுகல், தொண்டைப்புண் போன்ற சளிக்காய்ச்சல் அறிகுறிகள்
- மயல்கியா (தசை வலி) மற்றும் ஆர்த்ரல்கியா (மூட்டு வலி அல்லது இறுக்கம்)
- வயிற்றுப்போக்கு
- குமட்டல், வாந்தி, வயிற்றில் அசௌகரியம்
    - குமட்டலையும் வாந்தியையும் குறைக்க, மருந்தைச் சாப்பாட்டுடன் அல்லது சாப்பாட்டுக்குப் பிறகு உட்கொள்ளுங்கள்
    - கொழுப்புமிக்க, காரமான அல்லது மிகுந்த வாடை உள்ள உணவு வகைகளைத் தவிர்த்திடுங்கள்

## நான் உடனடியாக மருத்துவக் கவனிப்பு நாடவேண்டிய அரிய, ஆனால் கடுமையான பக்கவிளைவுகள் என்ன?

மருந்து ஒவ்வாமையின் அறிகுறிகளில் பின்வருபவற்றுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை உள்ளடங்கும்:

- முகத்தில் / கண்களில் / உதடுகளில் / நாக்கில் வீக்கம்
- மூச்சுத்திணறல்
- உடலெங்கும் தோல் அரிப்பு

இந்த அறிகுறிகள் ஏதேனும் உங்களுக்கு ஏற்பட்டால், நீங்கள் உடனடியாக மருந்தை நிறுத்திவிட்டு, உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரைப் பார்க்கச் செல்லவேண்டும்.

பின்வரும் கடுமையான பக்கவிளைவுகள் நேர்ந்தால், நீங்கள் உடனடியாக உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரைப் பார்க்கச் செல்லவேண்டும்:

- இந்த மருந்தின் அரிய, ஆனால் கடுமையான ஒரு பக்கவிளைவு கணைய அழற்சி

(கணைய வீக்கம்). அதன் அறிகுறிகளில் உள்ளடங்குவன:
  - வயிற்றில், வயிற்றுப்பகுதியில் அல்லது முதுகில் கடுமையான வலி
  - குமட்டல் அல்லது நீங்காத வாந்தி
  - காய்ச்சல்

- புதிதாக ஏற்படும் கொப்பளங்கள் அல்லது சீழ்ப்புண்கள்

- லெக்டிக் அசிடோசிஸ் (உடலில் லெக்டிக் அமிலம் திரண்டு, இரத்தத்தில் அமிலத்தன்மையைக் கூட்டும் பிரச்சினை) மிகவும் அரிதான, ஆனால் ஆபத்தான மருத்துவப் பிரச்சினையாகும். உங்களது சிறுநீரகங்கள் சரியாகச் செயல்படாவிட்டால், இது ஏற்படக்கூடிய சாத்தியம் அதிகரிக்கும். லெக்டிக் அசிடோசிஸ் பிரச்சினையின் அறிகுறிகளில் உள்ளடங்குவன:
  - பசி குறையும்
  - சில காலத்திற்குத் தொடரும் வாந்தி மற்றும் வயிற்று வலி
  - உடல்நலம் இல்லாதது போன்ற உணர்வுடன் குளிராக அல்லது அளவுக்கதிக களைப்பாக இருக்கும்
  - வேகமான, குறுகிய சுவாசம்

## இந்த மருந்தை நான் உட்கொள்ளும்போது / பயன்படுத்தும்போது எந்தெந்த உணவை அல்லது மருந்தைத் தவிர்க்கவேண்டும்?

இந்த மருந்தை எடுத்துக்கொள்ளும் வேளையில் மது அருந்துவதைத் தவிர்க்கவேண்டும். ஏனென்றால், உங்கள் உடலில் லெக்டிக் அமிலம் திரண்டு, கணைய அழற்சி ஏற்படக்கூடிய சாத்தியம் அதிகரிக்கும்.

## இந்த மருந்தை நான் எப்படி பத்திரப்படுத்தி வைக்கவேண்டும்?

சூரிய ஒளி நேரடியாகப் படாத, குளுமையான, ஈரமில்லாத இடத்தில் பத்திரப்படுத்தி வைக்கவேண்டும். இந்த மருந்து பிள்ளைகளின் கைக்கு எட்டாமல் இருக்கவேண்டும்.

## இந்த மருந்தைப் பாதுகாப்பான முறையில் வீசுவது எப்படி?

இந்த மருந்தை ஒரு கறுப்பு நிறக் குப்பைப் பையில் போட்டு, இறுக்கமாகக் கட்டிய பிறகு, குப்பைத்தொட்டியில் வீசவேண்டும்.

## பொறுப்புத்துறப்பு

*மேற்குறிப்பிடப்பட்ட பக்கவிளைவுகள் முழுமையாக ஏற்படக்கூடியவை அல்ல என்பதை கருத்தில் கொள்ளவும்.இம்மருந்தை எடுத்துக் கொள்வதால் தங்களுக்கு ஏதேனும் பக்க விளைவுகள் ஏற்பட்டது எனக் கருதினால் தங்களது மருத்துவர் அல்லது மருங்தகரிடம் கலந்து ஆலோசிக்கவும்.*

*பரிந்துரைக்கப்படும் அளவைவிட அதிக மருந்தை நீங்கள் உட்கொண்டால், உடனடியாக மருத்துவக் கவனிப்பு நாடுங்கள். இந்தப் பக்கத்தில் உள்ள தகவல்கள், உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரிடமிருந்து கிடைக்கும் தகவலுக்கு மாற்றாகாது. தயவுசெய்து, மேல்விவரம் அறிய உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரிடம் ஆலோசனை நாடுங்கள்.*

*இந்தக் கட்டுரை தேசிய மருந்து தகவல் பணிக்குழு உறுப்பினர்களால் சுகாதார அமைச்சின் ஆதரவோடு உருவாக்கப்பட்டது. இந்தப் பணிக்குழுவில் குழுமப் பங்காளிகள் (தேசிய சுகாதாரப் பராமரிப்புக் குழுமம், தேசியப் பல்கலைக்கழகச் சுகாதாரக் குழுமம், சிங்ஹெல்த்), சமூக மருந்துக்கடைகள் (கார்டியன், யூனிட்டி, வாட்சன்ஸ்), சிங்கப்பூர் மருந்தியல் சங்கம் ஆகியன உள்ளடங்குகின்றன. இந்த உள்ளடக்கம், மருந்துக்கடைகளிலும் சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களிலும் மருந்து கிடைக்குமா என்ற விநியோகத் தகவலைப் பிரதிபலிக்கவில்லை. இத்தகைய தகவலுக்கு, அந்தந்த நிலையங்களிடம் நீங்கள் கேட்டறியலாம்.*